மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம், ஓட்டப்பிடாரம்.

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII,Cr.P.C)

வழக்கு எண். : OS 80/22

பெயர் : சந்திரன் (PW1)

த/பெ. : அனந்தப்பன் என்ற செல்லையா

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 16 th day of February 2024

**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

1) தகவல் அறியும் உரிமை சட்டத்தின் கீழ் நான் தான் மனு தாக்கல் செய்திருந்தேன்.அந்த ஆவணம் நீதிமன்றத்தில் பி.வா.சா ஆ 1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.

2)என்னிடம் காட்டப்படும் பி.வா.சா ஆ1 சந்திரன் தகப்பனார் பெயர் செல்லையா என்று மட்டும் உள்ளது என்றால் சரிதான்,ஆனால் என் அப்பா பெயர் அனந்தப்பன் என்ற செல்லையா. பி.வா.சா ஆ 1 UDR முன்பான ஆ பதிவேட்டில் தாவா சொத்தின் புல எண் 283/7 ல் பல் ஆ .அனந்தப்பன் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.என்னிடம் காட்டப்படும் பி.வா.சா ஆ 2ல் அனந்தப்பன் என்ற செல்லையா என்று எந்த இடத்திலும் குறிப்பிடபடவில்லை என்றால் எனக்கு படிக்க தெரியாததால் அதை பற்றி தெரியவில்லை.என்னால் தாக்கல் செய்யப்பட்டுள்ள கிரைய ஆவணத்தின் சங்கதிகள் பற்றி முழுமையாக தெரியாது என்றால் சரியல்ல.பி.வா.சா ஆ 2 ல் அனந்தப்பன் என்ற செல்லையா என்று குறிப்பிடபடவில்லை என்றாலும் அதை பற்றி தெரியாது என்று நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

3)பி.வா.சா ஆ 2ல் கருப்பன் மகன் அனந்தப்பன் என்று தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.பி.வா.சா, ஆ 3ல் அனந்தப்பன் தகப்பனார் பெயர் கருப்பன் என்று உள்ளது என்றால் சரிதான்.பி.வா.சா.ஆ 4 ஐ

பொறுத்து வாதி அவருக்கு பாத்தியப்பட்ட சொத்துகளை தானமாக கொடுக்க அவருக்கு அதிகாரம் உண்டு என்றால் அவரது சொத்துகளை கொடுக்கலாம் ஆனால் என்னுடைய சொத்துகளை கொடுக்க முடியாது.வாதிக்கு தனக்கு தேவையான சொத்தை பெற்றுக்கொள்ள உரிமை உண்டு என்றால் அவரது சொத்தை அவர் பெற்றுக்கொள்ளலாம் ஆனால் எனது பெற்றோர் பெயரில் உள்ள சொத்தை வாதியால் பெற முடியாது.பி.வா.சா ஆ 4 இந்த வழக்கிற்கு தேவையில்லாததது என்றால் சரியல்ல.

4)என்னிடம் காட்டப்படும் பி.வா.சா 7 ன் படி வாக்காளர் அடையாள அட்டை அடையாளமாக வைத்து தான் சொத்து பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான்.அந்த வாக்காளர் அடையாள அட்டையில் செல்லையா என்று குறிப்பிடபட்டுள்ளது என்றால் சரிதான்.அந்த வாக்காளர் அடையாள அட்டையின் படி என் தாத்தாவின் பெயர் கருப்பன் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.அந்த ஆவணத்தில் இருக்கும் கிராம நிர்வாக அலுவலர் கொடுத்திருக்கும் சான்று செல்லத்தக்கது அல்ல என்றால் சரியல்ல.கிராம நிர்வாக அலுவலர் கொடுத்த சான்றினை வைத்து மட்டும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள பி.வா.சா ஆ 7 செல்லத்தக்கது அல்ல என்றால் சரியல்ல.

5)இந்த வழக்கில் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் பி.வா.சா ஆ 1 முதல் 7 வரையானது உற்பத்தி செய்யப்பட்டது என்றால் சரியல்ல.என்னிடம் எந்த ஆவணமும் இல்லாதததால் தான் வாதியின் சொத்தை அபகரிக்க வேண்டும் என்ற எண்ணத்தில் நான் இடையூறு செய்து வருகிறேன் என்றால் சரியல்ல, என் அப்பா காலத்திலும் இருந்தும் நானும் அந்த சொத்தை தான் அனுபவித்து வருகிறோம்.தபசில் சொத்திற்கும் எனக்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல.வாதியின் வயது முதிர்வை பயன்படுத்தி அவர்களது அனுபத்தில் உள்ள சொத்தை தொடர்ந்து இடையூறு செய்து வருகிறேன் என்றால் சரியல்ல.மேற்படி

சொத்து வாதிக்கு மட்டுமே பாத்தியப்பட்டது என்றால் சரியல்ல.நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

(குறுக்கு விசாரணை முழுமையாக முடிக்கப்பட்டுவிட்டது)

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

மாவட்ட உரிமையியல் மற்றும்
குற்றவியல் நடுவர்,
ஓட்டப்பிடாரம்.